# ஆசிரை
# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

இம்மாதம் தாயகத்திலிருந்து எனது செய்தியை துணையாளனுக்கு அனுபபுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனது குடும்பத்தில் இடம் பெற்ற நிகழ்வுகளுக்காக தாயகம் வரவேண்டியிருந்துது. எனது சகோதரியின் மகள் தனது முதலாவது அர்ப்பணத்தை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் சேர்ந்து தை மாதம் 6ம் திகதி கொடுத்திருந்தார். அந்தத் திருப்பலியை தலைமைதாங்கி நடத்துவதற்கு இறைவன் தந்த பெரும் சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

தேவஅழைத்தல் என்பது இறைவன் கொடுத்த பெரும் கொடையாகவும், ஒப்பற்ற செல்வமாகவும் நான் கருகின்றேன். எனது பெற்றோரின், பங்குமக்களின் செபமும், ஆதரவும், கருணையும், ஒத்துழைப்பும் மிகவும் முக்கியம் என்பதை உணரக்கூடியதாக உள்ளது. இறைவன் தான் விரும்பிய பணியாளரை தாம் விரும்பியவாறு தெரிவு செய்கின்றார் என்பது உணரக்கூடியதாக உள்ளது. இன்னும் அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள் தேவையான பணியாளர்களை திருச்சபைக்கு தந்தருள்வார்.

அடுத்ததாக தாயகத்தில் கஷ்டப்பட்ட மக்களுக்கு பாடசாலை உபரகணங்கள், தேவையான உதவிகளையும் நேரடியாக செய்யக் கூடியதாக இருந்தது. குறிப்பாக எமது மறைத்தளத்தினால் கிறிஸ்மஸ், புதுவருடத் திருப்பலியில் சேர்க்கப்பட்ட காணிக்கை இப்படியான வறுமைப்பட்ட மக்களுக்கு படிப்பதற்கு உதவியாக இருக்கிறது என்பதை நினைக்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாகவும், மனத்திருப்தியாகவும் இருக்கின்றது.

மல்லாவி, கூழாகுறிப்பு, விசுவமடு, உருத்திரபுரம், மன்னார், கரந்தன் (நீர்வேலி). புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு), மட்டக்களப்பு போன்ற இடங்களிலுள்ள அதிக கஷ்டமான, வறுமை நிறைந்த பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் உதவியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடங்களிலுள்ள பிள்ளைகள் மிகவும் கஷ்டமான, குடும்ப வறுமையின் கீழ் வாழ்கின்றார்கள் என்பது உணரமுடிகின்றது. தேவைகள் அதிகம் ஆனால் அத்தனை தேவைகளும் பூர்த்தி செய்யமுடியாதுள்ளது என்பது உண்மை. இப்பாடசாலை அதிபர்களை சந்தித்த பொழுது மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

இப்படியான உதவிகள் தொடர்ந்து செய்தால் பிள்ளைகளுக்கு மிகவும் உதவியாயிருக்கும் என்று கூறியிருந்தார்கள். சில பெற்றோர்களையும் சந்திக்கக் கூடியதாயிருந்தது. மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். உதவி செய்த எல்லோரும் நன்றி தெரிவித்தார்கள். எமது தாயகத்தின் அரசியல் நிலைப்பாடு மிகவும் மோசமான நிலையிலுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

ஒருமையாக நின்று எமது இனத்தின் பாதுகாப்பையும், பாசத்தையும் காட்டவேண்டிய அரசியல் கட்சிகள் எல்லாம் பிரிந்து போட்டிபோட்டு ஒருமையைக் குலைத்து மிகவும் மோசமான நிலையிலுள்ளது. தேர்தலுக்காக யாரைப் பிடித்து விழுங்கலாமென கொந்தளித்து திரியும் மிருகங்களைப் போல் தமிழ் அரசியல் வாதிகள் திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதுதான் தற்போதைய நிலை. குளிர் வாட்டிவதைக்கின்ற வேளையிலும் நாளாந்த செயல்பாடுகளை செய்து கொண்டிருக்கும் எமக்கு இறைவன் மேலும் தனது ஆசீர்வாதங்களால் பொழிந்துகொண்டிருக்கின்றார்.

இறைவனுக்கு நன்றி

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest**
**Our Lady of Deliverance Tamil Catholic Mission**
**Montreal (QC), Canada.**